**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு**

**O.S.No.** 542/2024

2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 23 ம் தேதியன்று **PW.2** ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கார்த்திகேயன் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் சாட்சி. நீதிமன்ற அழைப்பாணையின் பெயரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது திண்டல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஈரோடு மாவட்டம் திண்டல் கிராமத்தில் சர்வே எண் 93/1, 2, 3, 4 ஆகிய காலைகள் அமைந்துள்ள மனைநிலங்களை பார்வையிட்டு புல தணிக்கை செய்து சான்று வழங்கியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 10 நான் வழங்கிய சான்று தான்.